**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.167/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-2 |
| Name | : | மாரிமுத்து, வயது 21 |
| Father Name/Husband Name | : | முருகேசன் |
| Village | : | எட்டையாபுரம் |
| Taluk | : | எட்டையாபுரம் |
| Calling | : | மெக்கானிக் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2025.

**(எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எட்டையாபுரத்தில் வசித்து மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்னர் 2024 ஆம் ஆண்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் செக்யூரிட்டியாக வேலை செய்து வந்தேன். அ.சா.1 ஐ தெரியும் அவரும் என்னுடன் அதே மருத்துவமனையில் செக்யூரிட்டியாக வேலை செய்து வந்தார்.
2. ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் இருவரும் அரசு மருத்துவமனையில் திருட வந்தர்கள் என்பதால் தெரியும். சுமார் 8 மாதங்களுக்கு முன்னர் அதிகாலை 03.00 மணியளவில் அரசு மருத்துவமனையில் நானும் அ.சா.1ம் ரவுண்ட்ஸ் சென்ற போது எதிரிகள் இருவரும் மருத்துவமனைக்குள் இருந்த பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்திருந்தார்கள்.
3. நாங்கள் அவர்களிடம் எதற்கு உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு சும்மா உட்கார்ந்திருப்பதாக சொன்னார்கள். மறுபடியும் ரவுண்ட்ஸ் வரும் போது எதிரிகள் இருவரும் கோவிலின் உண்டியலை உடைத்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களை பிடித்து காவல்நிலையத்திற்கு கூட்டிச் சென்றோம்.
4. இது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். அந்த புகாரில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நீங்கள் எத்தனை வருடங்களாக அரசு மருத்துவமனையில் செக்யூரிட்டியாக வேலை செய்தீர்கள் என்றால் ஒன்றரை வருடமாக. உங்களுக்கு சம்பளம் யார் கொடுப்பார் என்றால் சுப்புராஜ் என்பவர் கொடுப்பார். நீங்கள் என்றைக்கெல்லாம் விடுமுறையில் சென்றீர்கள், பணிக்கு வந்த விவரங்கள் சுப்புராஜ் என்பவரிடம் இருக்கும் என்றால் சரிதான்.
2. உங்களை போலிசார் விசாரிக்கும் போது நீங்கள் பணியில் இருந்ததற்கான ஆவணத்தை சுப்புராஜ் என்பவரிடம் வாங்கிக் கொடுத்தீர்கள் என்றால் ஆம். போலிசார் விசாரணையின் போது எதிரிகள் கோவில் உண்டியல் பூட்டை உடைத்துக் கொண்டிருந்ததை நேரடியாக பார்த்ததாக தான் சொன்னீர்கள் என்றால் ஆம்.
3. உங்களுக்கு எழுத படிக்கத் தெரியும் என்றால் ஓரளவுக்கு தெரியும். நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் தான் புகாரை எழுதினார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது எதிரிகளை கூட்டிச் சென்ற விவரம் அங்கிருந்தவரகளுக்கு தெரியும் என்றால் சரிதான்.
4. சம்பவம் நடந்த உடன் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் வந்து தான் இரண்டு பேரையும் காவல்நிலையம் கூட்டிச் சென்றார்கள் என்றால் சரிதான். உங்களை போலிசார் விசாரிக்கும் போதும் போலிசர் தான் எதிரிகளை காவல்நிலையம் கூட்டிச் சென்றார்கள் என்ற விவரத்தை சொன்னீர்கள் என்றால் சரிதான்.
5. பணம் எவ்வளவு இருந்தது, என்ன உண்டியல் என்ற விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல சம்பவ இடத்தில் வைத்து எண்ணி பார்த்த பின்னர் தான் காவல்நிலையத்திற்கு போனோம். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து கீழே கிடந்த உண்டியலை தான் எடுத்துச் சென்றார்கள் என்றால் சரிதான்.
6. போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தான் நீங்களும் அ.சா.1 ம் காவல்நிலையம் போனீர்கள் என்றால் ஆம். போலிசார் சொல்லி தான் பணம் எவ்வளவு இருந்தது என்ற விவரம் சொன்ன பிறகு தான் தெரியும் என்றால் சரிதான்.
7. பொதுவாக அரசு மருத்துவமனையில் பிரச்சனை ஏற்பட்டால் மருத்துவரிடம் அனுமதி வாங்கி தான் புகார் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் மருத்துவரிடம் அனுமதி வாங்கி அவரது ஒப்புதலுடன் தான் புகார் கொடுத்தீர்கள் என்றால் சரிதான்.
8. அந்த புகாரில் நடவடிக்கை எடுக்க வேண்டி பரிந்துரை செய்து கிழக்கு காவல்நிலையத்திற்கு அனுப்பினார் என்றால் சரிதான்.

நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் அ.சா.1 உங்கள் உடன் பணிபுரிந்ததால் நடக்காத சம்பவத்திற்கு பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் இல்லை.

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. 1 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை 2 வது எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்தவதாக தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.